5. அரசினர் தீர்மானம்

(அ) விதி 41 (3) ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. பேரவையின் 41 (3)-வது விதியின் கீழ் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை எடுத்துக்கொள்ளக் கூடாது என்ற விதியை இன்று தளர்த்த வேண்டும் என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப் பெற்றது.

6. கவன ஈர்ப்புகள்.

(அ) மேற்கு தாம்பரம் ரயில் நிலையமருகில் ஏற்பட்ட தீ விபத்து குறித்து.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

''மேற்கு தாம்பரம் ரயில் நிலையத்திற்கு அருகில் 6—4—1979 அன்று தீ விபத்தினால் ஏற்பட்ட சொத்திழப்பு பற்றி''.

திரு. பி. முசிறிப்புத்தன் (அமைச்சரின் பேரவை செயலர்):

தலைவரவர்களே செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ள விவரங்களாவன :—

தாம்பரம் ரெயில் நிலையத்துக்கருகில் இந்திரா காலனி எனும் குடியிருப்புப் பகுதியில் 6—4—79 அன்று, நடுப்பகல் 12 மணி அளவில் ஒரு தீ விபத்து ஏற்பட்டு, 17 குடிசைகளும், 17 கடைகளும் சேதமடைந்தன. தீ விபத்து பற்றி விசாரணை நடத்திய செங்கல்பட்டு சார் ஆட்சியர் (Sub-Collector) தீ விபத்திற்கான காரணம் தெரியவில்லையென்றும், ஆனால் தீ விபத்து எந்த தீச் செயலாலும் ஏற்பட்டதல்லவென்றும் தெரிவித்திருக்கிறார்.

இந்த தீ விபத்தினால் குடிசைகளுக்கும், கடைகளுக்கும் ஏற்பட்ட சேதம் மொத்தம் ஒரு இலட்சம் ரூபாய் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட 17 குடிசைகளின் சொந்தக்காரர்களுக்கும் அவர்களது ஏழ்மை நிலையைக் கருதி குடிசை புனரமைப்புத் தொகையாக 7—4—79 அன்று தலா ரூ. 100 வீதம் மொத்தம் ரூ. 1,700 வழங்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட 17 கடைச் சொந்தக்காரர்களும், தங்கள் வியாபாரத்தில் போதிய வருமானம் பெற்று வருவதால்